வெளியீடு க.

உ

சிவமயம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சைவ சித்தாந்தத் தேன்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 FEB 1926
MADRAS

காரைக்குடி

சோமசுந்தரச் செட்டியார்

எழுதியது.

இரங்கூன் தனவைசிய இளைஞர்
தமிழ்ச் சங்கத்தார் வெளியீடு—க.

# சைவ சித்தாந்தத் தேன்.

OFFICE OF THE REGISTRAR OF
16 FEB 1926
MADRAS

காரைக்குடி
அரு. சோமசுந்தரச் செட்டியார்
எழுதியது.

குமரன் அச்சுக்கூடம், காரைக்குடி.
குரோதன ஆண்டு.
1926.

சென்னை-600 008

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவ சித்தாந்தத் தேன்.

## தோற்றுவாய்.

‘சைவ சித்தாந்தத் தேன்" என்னும் இத் தொடர்மொழி சைவம், சித்தாந்தம், தேன் என மூன்று பகுப்பாகப் பகுக்கப்படும். சைவம் எனுஞ் சொல்லின் பொருள், சிவ சம்பந்தம் உடையது—சிவனொடு தொடர்புடையது என்பதாகும். இதனை, "சைவம் சிவத்தொடு சம்பந்தம் என்றான்" எனுஞ் சிற்றம்பலநாடிகள் திருவாக்கு நன்கு வலியுறுத்தும். சிவம் எனுஞ் சொல்லின் பொருள், மங்களம் (நன்மை) என்பதாகும். அன்பே சிவம். நமது மணிவாசகப் பெருந்தகையார் இறைவனை, "ஈறிலாப் பதங்களி யாவையுங் கடந்த, இன்பமே என்னுடை அன்பே!" என அழைத்தருளுதலால் இவ்வுண்மைகளை இனிது தெளியலாம். சித்தாந்தம் எனுஞ் சொல்லின் பொருள், முடிந்த முடிபு என்பதாகும். எனவே, சைவ சித்தாந்தம் எனும் இவ்விரு சொற்களின்பொருள், சிவனொடு தொடர்புடைய முடிந்தமுடிபாகிய நெறி என்பதாகும். தேன் எனுஞ் சொல், ஈண்டு வடிகட்டிய இறுதிப் பயனாகிய சாரத்தையும் இனிமையையும் புலப்படுத்துகின்றது. ஆகவே, சைவ சித்தாந்தத் தேன் எனுந் தொடர்மொழியின்

பொருள், சைவ சித்தாந்தமாகிய தேன்—சிவநெறி இன்பம் என்பதாகும். மிக உயரிய தத்துவ முடிபினையுடைய நமது சைவத் தனியரசினை, 'வடி கட்டிய இறுதிப் பயனாகிய சாரமான இன்பத்தேன்' எனத் திருவாய் மலர்ந்தருளிய பெரியார், திருச்செந்தின் முருகன் திருவருள் பெற்றுப் பிறங்கியருளிய குமரகுருபர சுவாமிகளாவார்கள். அன்னார் திருவாய் மலர்ந்தருளிய இன்பப் பாடல் வருமாறு:—

குடிலை யென்னுந் தடவய லப்பண்
அருள்வித் திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேத மென்னும் பாதபம் வளர்த்தனை
பாதப மதனிற் படுபயன் பலவே—அவற்றுள்
இலைகொண் டுவந்தனர் பலரே யிலையொரீஇத்
தளிர்கொண் டுவந்தனர் பலரே தளிரொரீஇ
அரும்பொடு மலர்பிஞ்சு சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
அவ்வா றுப்பு மிவ்வாறு பயப்ப
ஒரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா வின்ப வருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே.

## பெருமை.

நமது இன்ப அன்பு நெறியாகிய சைவ சமயத்தின் மாட்சி அளவிடற்கரியதாகும். எல்லாச் சமயங்களுள்ளும் மிகத் தொன்மையானதும் நிறைந்த உண்மைகளை உடையதும் நமது சைவ சமயமேயாம். திருஞானசம்பந்தப் பெருமானார் முதலிய பெரியோர்கள் நமது சைவ நன்னெறியினைத் திருநெறி, ஒளி

நெறி, ஒருநெறி, சிவநெறியெனப் பெரிதும் பாராட்டிச் சிறப்பித்துக் கூறியருளி யிருக்கின்றார்கள். நமது சேக்கிழார் பெருமான், "முதற் சைவநெறி" என மொழிந்தருளுகின்றார்.

சைவ சமய மேசமயஞ் சமயா தீதப்பழம் பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளி காட்டுமிந்தக் கருத்தை [விட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறி புகுத வேண்டா முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேர வாருஞ் செகத்தீரே.

எனத் திருவாய் மலர்ந்தருளி நமது தாயுமானார் உலகத்து மக்களனைவரையும், "சமயங்களுட் சிறந்த சைவ சமயத்திற் சேருங்கள்! சேருங்கள்!" எனப் பெரிதும் பரிந்து அழைக்கின்றார். சிவஞான சித்தியார் எனும் இனிய நூலின்கண்ணே, நமது சந்தானாசாரியருள் ஒருவராகிய அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் நமது சைவ சமய மாட்சி குறித்துச் சில அருமையான பாடல்களை வரைந்தருளி யிருக்கின்றார்கள். அப்பெரியார் அப்பாடல்களில், "உலகத்திலுள்ள பல்வகைப் பிறவிகளுள்ளும் மனிதப் பிறவியைப் பெறுதல் மிக அரிதாகும். மனிதப் பிறவியைப் பெற்றாலும் உத்தமமான சமயத்தில் உத்தமராய்ப் பிறத்தல் அரிது. அவ்வாறு எல்லா நலன்களும் அமையப்பெற்றாலும், குலம், இளமை, கல்வி, செல்வம், அதிகாரம் என்னும் இவைகளான் உளதாகிய செருக்கு ஒழிந்து, வறுமையால் அச்செருக்குடையார் பின்சென்று நின்று எக்கறலாகிய சிறுமையி னீங்கி, மெய்யன்போடும் சைவ சமயத்தைச்

சாரும் புண்ணியப்பேறு கிட்டுதல் அரிதாம். அதனினும் உயர்ந்த சித்தாந்த நெறி யுணர்ச்சியாலே, மதியணி சடை யெம் மண்ணலாராகிய சிவ பரம்பொருளை மனமொழி மெய்களால் என்றும் வழிபாடு செய்தின்புறுவோரே மும்மல நீக்கமடைந்து, அண்ணலார் தண்ணருள்பெற்று வீடுபேறெய்துவர்" என விளம்புகின்றார்கள். அவ்வின்பப் பாடல்கள் வருமாறு:—

அண்டசஞ் சுவேத சங்க ளுற்பிச்சஞ் சராயு சத்தோடு
எண்டரு நாலெண் பத்து நான்குநூ றாயி ரத்தாய்
உண்டுபல் யோனி யெல்லா மொழித்துமா னுடத்து தித்தல்
கண்டிடிற் கடலைக் கையா னீந்தினன் காரி யங்காண்.

நரர்பயி றேயந் தன்னி னுன்மறை பயிலா நாட்டில்
விரவுத லொழிந்து தோன்றன் மிக்கபுண் ணியத்தா ருகும்
தரையினிற் கீழை விட்டுத் தவஞ்செய் சாதியினில் வந்து
பரசம யங்கட் செல்லாப் பாக்கியம் பண்ணு ணுதே.

வாழ்வெனு மையல் விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மை யோடுஞ் சைவமாஞ் சமயஞ் சாரும்
ஊழ்பெற லரிது சால வுயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியி னானைப் போற்றுவா ரருள் பெற்றாரே.

அப்பெரியார் மற்றுமொரு இன்பப் பாடலில், "நமது சைவ சமயமே எல்லாச் சமயங்களுக்குந் தாயகமானது. இது ஆகும், அது ஆகாது! எனும் பிணக்கின்றி எல்லாச் சமய உண்மைகளும் நீதியினல் இப்பெருஞ் சமய உண்மைகளுள் அடங்கும்" எனும் உண்மையினை உரைத் தருளுகின்றார்கள். அஃது வருமாறு:—

ஓதுசம யங்கள்பொரு ளுணரு நூல்க
ளொன்றேடொன் றொவ்வாம லுளபலவு மிவற்றுள்
யாதுசம யம்பொருணூல் யாதிங் கென்னி
னிதுவாகு மதுவல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியினு னிவை யெல்லா மோரிடத்தே காண
நின்றதியா தொருசமய மதுசமயம் பொருணூல்
ஆதலினு னிவையெல்லா மருமறையா கமத்தே
யடங்கியிடு மவையிரண்டு மானடிக்கீ ழடங்கும்.

இவ்வாறு சைவசமயம் எல்லாச் சமயங்களுக்குந் தாயகமாகத் திகழ்தலே நமது தாயுமானவரும் "ராஜாங்கத்தி லமர்ந்தது வைதிக சைவம் அழகிதந்தோ" எனத் திருவாய் மலர்ந்தருளுவாராயினர்.

## கொள்கைகள்.

நமது சைவ சமயமானது விரிந்த பல அரிய கொள்கைகளையுடையதாக விளங்குகின்றது. அவைகளுட் சில முக்கியமான கொள்கைகளை ஈண்டுச் சுருக்கி வரைவாம். நமது சைவ சமயத்திற்குச் சிவபரம் பொருளே முழுமுதற் கடவுளாவார். அவர் ஒருவர்தான் தலைமைத் தன்மையுடையவர். ஏனையோரனைவரும் அவருக்கு அடிமைகளே யாவார்கள். அவர் பதி யெனவும், ஏனையோர் பசுக்கள் எனவும் அழைக்கப்பெறுவர். இதனை ஆண்டான் அடிமை யெனவும் இயம்புதல் உண்டு. இவ்வாண்டான் அடிமைத் திறந்தான் சைவ சமயத்திற்கு உயிர்நாடி போன்றது. எல்லாம் வல்ல இறைவன் ஆண்டவனாக, நாமனைவரும் அவன் அடிமைகளாக இருந்து வழிபாடு புரியும் உண்மை ஒன்றே சைவ சமய

மாட்சியினை இனிது புலப்படுத்தும். "நானே கடவுள்" எனும் இறுமாப்பு இன்றிச் சைவ நன்மக்களாகிய நாம் அனைவரும், "நமது தலைவன் இறைசிவன் நாம் அவன் அடிமைகள்" என எண்ணி இன்புற்று வழிபாடு புரிந்து அத்தடங் கருணைப் பெருங்கடலாகிய பெருமானின் திருவருளுக்குப் பாத்திரராகின்றோம்.

பசுக்கள் (உயிர்கள்) ஆகிய நாம் பாச சம்பந்தம் உடையவர்கள். நம்முடைய ஆன்மாவானது பாசத்தாற் கட்டப்பட்டிருக்கின்றது. அஃதாவது நமது ஆன்மாவாகிய ஒளி பொருந்திய இரத்தினத்தை, ஆணவம், மாயை, கன்மம் எனும் மூன்று வகையான தீய குணங்களையுடைய இருட்படலங்கள் மறைத்துக் கொண்டிருக்கின்றன. இம் மும்மலங்களும் நீங்கப்பெற்ற அன்றே, ஆன்மா முத்தி நிலையடைதற்கு உரியதாகும். ஆன்மா பாசத்தினின்றும் விடுபட்டு இறைவன் திருவடியைச் சார்தலே வீடுபேறெய்துதல் ஆகும். இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் இடையே தடையாக மறைத்துக் கொண்டிருப்பது பாசமேயாம். எனவே பாசத்தினின்றும் பசு விடுபடு நாளே, பதி திருவடி நண்ணும் இனிய நாளாகும். பதி பசு பாசம் ஆகிய மூன்றும் என்றும் அழிவில்லாத உண்மைப் பொருள்களாம். இஃதே முப்பொருளுண்மையென மொழியப்படும். இம்முப்பொருளுண்மை தான் சைவ சமயத்தின் முதன்மையான குறிக்கோளாகும். சைவ சமய தத்துவங்கள் முப்பத்தாறு ஆகும். இம்முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து

இறை சிவன் ஒருவனே ஒளிர்கின்றான். இவ்வுண்மையினைப் பின்வரும் சிவஞானசித்தியார் செய்யுள் நன்கு விளக்கும்:—

மொய்தரு பூத மாதி மோகினி யந்த மாகப்
பொய்தரு சமய மெல்லாம் புக்குநின் றிடும்பு கன்று
மெய்தரு சைவ மாதி யிருமூன்றும் வித்தை யாதி
எய்துதத் துவங்க ளேயு மொன்றுமின் றேம்மி
[றைக்கே.

சைவ சமயத்தின் கிரியைக்குப் பிரமாண நூல்கள், சிவாகமம், பத்ததி முதலியனவாம். தத்துவ ஆராய்ச்சிக்குப்பிரமாண நூல்களில்மிகமுக்கியமானது சிவஞான போதமாம். சிவாகமங்கள் இருபத்தெட்டு. சைவ சாத்திரங்கள் பதினான்கு. திருமுறைகள் பன்னிரண்டு. அவைகளுள் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் முதலிய அருட்பாக்கள் ஐந்தும் சிறப்புடைய தோத்திரங்களாம். திருநீறும் உருத்திராக்கமும் சைவ சமய அடையாளங்களாகும். சைவ சமயப் பிரவேசக் கிரியை சிவதீக்ஷையாகும். திருநீறு, உருத்திராக்கம், பஞ்சாக்கரம் ஆகிய மூன்றும் சிவ சாதனங்கள் எனப்படும். சைவ சமயாசாரியர்கள் நால்வர். அன்னார் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என அழைக்கப் பெறுவர். இவர்களே தேவார திருவாசகமாகிய தூய தோத்திரங்களை ஓதியருளியவர்கள்; நமது சைவ வான்பயிரை வளர்த்தருளிய சான்றோர்கள். இப்புனித மூர்த்திகள் நால்வரும், நமது சைவ சமயமாகிய புண்ணியத்

தேருக்கு நான்கு மணிவயிரப் பொற்றூண்கள் போல்வர். சந்தானுசாரியர் நால்வர். இவர்கள், மெய்கண்ட சிவாசாரியர், அருணந்தி சிவாசாரியர், மறைஞான சம்பந்த சிவாசாரியர், உமாபதி சிவாசாரியர் என அழைக்கப் பெறுவர். இவர்களே, சிவஞான போதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் முதலிய தமிழ்ச் சைவ சாத்திரங்கள் பதினன்கினையும் தந்தருளியவர்கள். இவர்கள் திருவாய் மலர்ந்தருளிய தூயமொழிகளாலேயே, இப் பொழுதும் நமது சைவ சமயம் தனது அரும்பெருங் கொள்கைகளைப் பொன்ற விடாது, யாண்டும் பொலிவித்துக் கொண்டிருக்கின்றது. இந்நால்வரும் நமது சைவத் தேரின் நான்கு பக்கங்களிலும் மிளிரும் நான்கு பொற்கொடிகள் போல்வர். திருமாளிகைத் தேவர், சேந்தனர் முதலிய ஒன்பது நாயன்மார்களும், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு முதலிய அருட்பாக்களை ஓதியவர்கள். திருமூலமாமுனிவர், சண்டேசுரர், கண்ணப்பர், காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார் முதலிய அறுபான் மும்மை நாயன்மாரும் சிவ வழிபாடு செய்து முத்தி பெற்றவர்களாவார்கள். மற்றும் பட்டினத்தார், தாயுமானர் முதலிய பெரியோர்களும் சிவவழிபாடு செய்து முத்தி பெற்றோரேயாவார்கள். சைவ சமயக் கொள்கையின்படி வீடு பேறெய்துதல், இறைவன் இணையடி நீழலில் இரண்டறக் கலத்தல் என்று இயம்பப்படும். சிவ வழிபாடு செய்து வீடு பேறெய்தற்குரிய வழிகள் (படிகள்) நான்கு ஆகும். அவை, சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படும்.

சைவசமயத்தின் மூக்கியமான நோக்கம் அன்பு நெறியேயாகும். அன்பே சிவமாதலால், அன்பு நெறியே சிவ நெறியாகும். அன்பு, இறை சிவன் பால் வைப்பது, உயிர்கள்பால் வைப்பது என இரு திறப்படும். "பக்தி வலையிற் படுவோன் காண்க" என நமது மணிவாசகப் பெருந்தகையார் புகன்றருளுதற்கேற்ப, நாம் நாடோறும் திருக்கோயிலுக்குச் சென்று இறைவனுடைய திருவுருவத்தினை உண்மை அன்போடு உளங்கனிந்து உருகத் திருப்பாசுரங்களை ஓதி வணங்குவோமானால், அவர் நமக்கு எல்லா நலன்களையும் ஈந்து நம்மை உய்வித்தருளுவர். "எவ்வுயிரும் நீங்கா துறையும் இறை சிவனென்று, எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" எனச் சைவ சமய நெறி சாற்றுவதைப்போல், நாம் எல்லா உயிர்களையும் இறை சிவன் உறையுந் திருக்கோயில்கள் என உன்னி அவைகளிடத்துப் பேரன்பு காட்டுதல் வேண்டும். எவ்வுயிர்க்கும் எவ்விடத்தும் எக்காலத்தும் எக்காரணத்தை முன்னிட்டும் எவ்வகையான தீங்கும் இழைத்தல் ஆகாது! எள்ளளவும் இரக்கமின்றி உயிர்க்கொலை புரிந்து மச்ச மாமிசம் புசிக்கும் மக்கள் ஒரு நாளும் சைவ சமயிகளாகமாட்டார்கள். காளி, கறுப்பன், மாடன் முதலிய சிறு தெய்வங்களுக்கு ஆடு கோழி முதலிய உயிர்ப் பிராணிகளை அறுத்து வழிபாடு புரிவோரும் சைவ சமயிகளல்லர். இறை சிவனிடத்தும், உயிர்களிடத்தும் நிறைந்த அன்பு பூண்டிலங்கும் மெய்யன்பர்களாய்ச் சிவ வழிபாடு புரிவோரனைவருமே சைவப் பெருமக்கள் என அழைக்கப் பெறுவர். இவர்கள், கொலை, களவு,

600 008.



களவு, காமம், பொய் எனும் ஐம்பெரும் பாவங்களையும் அவசியம் விலக்கிவிடுதற்குக் கடமைப்பட்டவர்களாவார்கள்.

## இறுவாய்.

சைவசமயமானது மிகப் பரந்த நோக்கமுடையதாகும். சைவ சமயத்தில் சாதி வேறுபாட்டுத் துன்பம், மக்களுக்குள் உயர்வு தாழ்வு இடர் முதலியன கிடையா. சிவ சின்னங்களை யணிந்துகொண்டு, சைவ ஒழுக்கத்திற்கு மாறுபடாது நின்று, சிவ வழிபாடு செய்வோர் அனைவரும், எந்நாட்டினராயினும் எம்மொழியினராயினும் எச்சாதியினராயினும் ஒரே தகுதியுடைய சிவனடியார்களே யாவார்கள். இத்தகைய விரிந்த கொள்கைகளையுடைய சமரச சன்மார்க்கமாகிய சுத்தாத்துவித சைவ சித்தாந்த நெறியில் பிறக்கும் பேறு பெற்றதுபற்றிச் சைவ நன்மக்களாகிய நாம் அனைவரும் பெருமகிழ்வுகொண்டு, வற்றாத இன்பவூற்றாகிய சைவசித்தாந்தத்தேனைப் பருகி மகிழ்தல் வேண்டும். பிறரும் அவ்வின்பத் தேனைப் பருகி மகிழுமாறு சமயப் பிரசாரம் செய்தல் வேண்டும். உலகில் திரளான மககள் சமய ஞானம் இன்மையாகிய பசியினால் பெரிதும் வருந்திக்கொண்டிருக்கிறார்கள். இத்தருணத்தில் சைவப் பெருமக்களாகிய நாம் அனைவரும், நமது சைவ சித்தாந்தத் தேனைத் தாராளமாக உலகத்து மக்களுக் குவப்புடன் வழங்குதல்வேண்டும். யாண்டும் இவ்வின்பத் தேனின் நறுமணம் கமழுமாறு செய்தல் வேண்டும்.